[2nd March 1968

Cinemas

*156 *Q.*—THIRU M. RAJAH IYER: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) the number of (i) touring cinemas and (ii) permanent cinema theatres in the State as on 31st March 1967; and

(*b*) the steps, if any, taken by the Government to prevent the running of tourist cinemas in thatched or cumbustible sheds?

மாண்புமிகு (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) (i) நிலையான திரைப்பட மாளிகைகள்—569.

(ii) இடம்பெயரும் திரைப்பட கொட்டகைகள்—363.

(இ) எளிதில் தீப்பற்றிக்கொள்ளக்கூடிய பொருள்களால் கட்டப்பட்ட இடம் பெயரும் திரைப்படக் கொட்டகைகளில் (Touring Cinemas) தமிழ்நாடு 1957-ம் ஆண்டு திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) விதிகளில் கூறியுள்ளவாறு தீயணைப்பு முன் எச்சரிக்கை ஏற்பாடுகள் செய்யப் பட்டிருந்தால் அக் கொட்டகைகள் நடத்துவதை மேற்படி விதிகள் தடை செய்யவில்லை.

திரு. என். ஆர். தியாகராஜன்: தலைவரவர்களே, இந்த "டூரிங் டாக்கீஸ்கள்" மூலமாக ஒருவருக்கொருவர் சண்டை, சச்சரவுகள் அரசியல் காரணமாக ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. அது மாத்திரமல்ல. அரசாங்கத்திற்குக் கொடுக்கக் கூடிய வரியையும் இந்த டூரிங் டாக்கீஸ்காரர்கள் ஏமாற்றிக்கொண்டு வருகிறார்கள். ஆகவே இந்த டூரிங் டாக்கீஸ்களுக்கு அனுமதி கொடுப்பதில்லை என்று அரசாங்கம் முடிவு செய்யுமா?

மாண்புமிகு (திருமதி) சத்தியவாணிமுத்து: தலைவரவர்களே, இது வரை வரி வசூல் இந்த தியேட்டர்களிலிருந்து சரியானபடி செய்யப்படவில்லை என்று புகார்கள் ஒன்றும் வரவில்லை. வசூல் செய்யும் இலாகா ஒழுங்காக செய்து கொண்டு வருகிறது. தவறு செய்பவர்கள் தண்டிக்கப் படுவார்கள்.

திரு. வி. கே. ராமசாமி முதலியார்: தலைவரவர்களே, லைசென்ஸ் கொடுக்கும்போது அதிலே ஏராளமான ஊழல்கள் நடைபெறுகின்றன. 10 மாதம் ஒரு வருடம் வரை கூட லைசென்ஸ் கொடுக்கப்படாமல் இருக்கிறது. இதனால் சர்க்காருக்கு அதிகமாக நஷ்டம் ஏற்படுகிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? அதற்கு முயற்சி எடுக்கப்படுமா?

மாண்புமிகு (திருமதி) சத்தியவாணிமுத்து: இது மூலக் கேள்விக்கு முற்றிலும் புறம்பான கேள்வி. இருந்தாலும் லைசென்ஸ் தருவதில் ஏதாவது குறைகள் இருந்தால் அதுபற்றி தெரிவித்தால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

Hospitals

*157 *Q.*—THIRU N. R. THIAGARAJAN: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) the names of the Hospitals to be taken over by the State Government during the financial year 1967–68;

(*b*) the places where new hospitals are proposed to be constructed; and

(*c*) the places where it is proposed to open Primary Health Centres during 1967–68?